**அக்டோபர் – 15**

# TNPSC துளிகள்

- அருணாச்சலப் பிரதேசத்தைச் சுற்றுலா மற்றும் சாகச விளையாட்டுகளின் இடமாக மேம்படுத்துவதற்காக, அம்மாநில முதலமைச்சரான பெமா காண்டு மேல் சியாங் மாவட்டத்தின் தலைமையகமான யிங்கியோங்கிலிருந்து கிழக்கு சியாங் மாவட்டத்தின் தலைமையகமான பாசிகாட் வரை 122 கி.மீ தூரத்திற்கு இரு சக்கர வாகனத்தில் பயணம் மேற்கொண்டார்.
    - இந்தப் பாதையானது சியாங் பள்ளத்தாக்கு மற்றும் ஆதிப் பழங்குடியினரின் கிராமங்கள் ஆகியவற்றின் சிறந்த அழகிய காட்சிகளை எடுத்துக் காட்டுகின்றது.
- மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சரான நிதின் கட்கரி டிசம்பர் 1 ஆம் தேதியிலிருந்து, நாடு முழுவதும் உள்ள தேசிய நெடுஞ்சாலைகளின் அனைத்து வழித்தடங்களிலும் உள்ள சுங்கச் சாவடியின் சாளரங்கள் ஒவ்வொரு வாகனத்திலும் உள்ள RFID (radio-frequency identification) சில்லுகளான FASTagஐ ஏற்கத் தொடங்கும் என்று அறிவித்துள்ளார்.
    - தேசிய நெடுஞ்சாலைகளில் மொத்தமுள்ள 527 சுங்கச் சாவடிகளில், 380 சுங்கச் சாவடிகள் அதன் அனைத்து பாதைகளிலும் FASTagஐப் பெற்றுள்ளன.
- உயர் நீதிமன்றத்தின் தற்காலிகத் தலைமை நீதிபதியாக ஓய்வு பெறும் உயர் நீதிமன்ற நீதிபதி ஒருவர் ஓய்வு பெற்ற தலைமை நீதிபதிக்கு கிடைக்கக்கூடிய ஓய்வூதிய சலுகைகளைப் பெற "உரிமை இல்லை" என்று உச்ச நீதிமன்றம் கருதுகின்றது.
    - அது மேலும் கூறுகையில், "வரையறுக்கப்பட்ட ஊதியத்திற்காக மட்டுமே, அத்தகைய தற்காலிகத் தலைமை நீதிபதி தலைமை நீதிபதிக்கு இணையாக நடத்தப் படுகிறார் என்றும் வேறு எந்த நோக்கத்திற்காகவும் அல்ல" என்றும் கூறியுள்ளது.
- ஸ்வீடனைச் சேர்ந்த இளம் வயது காலநிலை மாற்ற ஆர்வலரான கிரெட்டா துன்பெர்க் மற்றும் கேமரூனைச் சேர்ந்த 14 வயது அமைதித் தூதுவரான டிவினா மலூம் ஆகியோருக்கு டச்சு அமைப்பால் சர்வதேச குழந்தைகள் அமைதிப் பரிசு வழங்கப் பட்டுள்ளது.
    - நவம்பர் 20 ஆம் தேதி தி ஹேக்கில் நடைபெறும் விருது வழங்கும் ஒரு விழாவில் இந்தப் பரிசு அவர்களுக்கு வழங்கப்பட இருக்கின்றது.
- ஹகிபிஸ் சூறாவளியானது (அதன் பொருள்: பிலிப்பைன்ஸ் மொழியான டாக்லாக் மொழியில் "வேகம்" என்று பொருள்படும்) சமீபத்திய காலங்களில் ஜப்பானைத் தாக்கிய மிக மோசமான சூறாவளியாக மாறியுள்ளதுடன், அதிக எண்ணிக்கையிலான இறப்புகளை ஏற்படுத்தி லட்சக்கணக்கான மக்களைப் பாதித்துள்ளது.
- மும்பையில் இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியத்தின் (Board of Control for Cricket in India - BCCI) தலைவர் பதவிக்கு இந்தியாவின் முன்னாள் அணித் தலைவரான சவுரவ் கங்குலி விண்ணப்பித்த பின்னர் அந்த வாரியத்தின் புதிய தலைவராக அவர் அறிவிக்கப் பட்டுள்ளார். அந்த அமைப்பின் செயலாளராக மத்திய உள்துறை அமைச்சரான அமித் ஷாவின் மகன் ஜே ஷா பதவியேற்க உள்ளார்.
    - இந்த வாரியத்தின் தலைவர் பதவிக்கு விண்ணப்பித்த ஒரே நபர் சவுரவ் கங்குலி ஆவார். எனவே BCCIன் தலைவர் பதவிக்கு அவர் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட இருக்கின்றார்.

# தமிழ்நாடு செய்திகள்

## 10 தேர்தல் மேற்பார்வையாளர்கள் நியமனம்

- தேர்தல் ஆணையமானது தமிழகத்தில் 10 இந்திய ஆட்சிப் பணி அதிகாரிகளை வாக்காளர் பட்டியலை மேற்பார்வையிடும் மேற்பார்வையாளர்களாக நியமித்துள்ளது.
- ஒவ்வொரு பார்வையாளரும் சில மாவட்டங்களுக்குப் பொறுப்பு அதிகாரிகளாக செயல்படுவார்கள். மேலும் அங்குள்ள வாக்காளர் பட்டியலின் சரிபார்ப்பு செயல்முறையை அவர்கள் மேற்பார்வையிடுவார்கள்.
- தமிழ்நாட்டில் மொத்தமுள்ள 5.99 கோடி வாக்காளர்களில், 1.64 கோடி வாக்காளர்கள் மட்டுமே தங்கள் விவரங்களை வாக்காளர் பட்டியலில் சரிபார்த்துள்ளனர்.
- வாக்காளர்கள் கைபேசி செயலியின் மூலம் நிகழ்நேரத்தில், தாலுகா அலுவலகங்கள், மின்னணுத் தகவல் சேவை மையங்கள் மற்றும் சிறப்பு முகாம்கள் ஆகியவற்றில் தங்கள் விவரங்களைச் சரி பார்க்கலாம்.

## ஷி ஜின்பிங்கிற்கும் மோடிக்கும் இடையிலான இரண்டாவது அதிகாரப் பூர்வமற்ற சந்திப்பு

- ஷி ஜின்பிங்கிற்கும் மோடிக்கும் இடையிலான இரண்டாவது அதிகாரப் பூர்வமற்ற சந்திப்பானது மாமல்லபுரத்தில் நடத்தப் பட்டது.



- இந்தச் சந்திப்பின் போது விரிவான பிராந்தியப் பொருளாதாரக் கூட்டுறவு (Regional Comprehensive Economic Partnership - RCEP) குறித்து இந்தியா தனது கவலைகளைக் கூறியதாக இந்திய வெளியுறவுத் துறை செயலாளரான விஜய் கோகலே கூறினார்.
- RCEP என்பது சீனா தலைமையில் முன்மொழியப்பட்டுள்ள ஒரு தடையில்லா வர்த்தக ஒப்பந்தமாகும்.
- இந்தியாவிற்கும் சீனாவிற்கும் இடையில் 53 பில்லியன் டாலர் மதிப்பிலான வர்த்தகப் பற்றாக்குறை குறித்தும் இங்கு விவாதிக்கப் பட்டது.
- சீன துணைப் பிரதமரான ஹு சுன்ஹுவா மற்றும் இந்திய நிதியமைச்சரான நிர்மலா சீதாராமன் ஆகியோருக்கு இடையே இது குறித்து விவாதிப்பதற்கு வழிமுறை ஒன்று நிறுவப் பட்டுள்ளது.

- இந்த சென்னைச் சந்திப்பை இரு நாடுகளுக்கும் இடையிலான “ஒத்துழைப்பின் புதிய சகாப்தம்” என்று மோடி பாராட்டியுள்ளார்.
- இரு தலைவர்களுக்கிடையில் இது போன்ற ஒரு முதலாவது அதிகாரப் பூர்வமற்ற சந்திப்பானது 2018 ஆம் ஆண்டில் சீனாவின் வுஹானில் நடத்தப் பட்டது.

***நேபாளத்தில்***

- சென்னைச் சந்திப்பைத் தொடர்ந்து, ஷி ஜின்பிங் அடுத்ததாக நேபாளத்திற்கும் பயணம் செய்தார். 1996 ஆம் ஆண்டிற்குப் பிறகு சீன அதிபர் ஒருவர் நேபாளத்திற்குப் பயணம் மேற்கொள்வது இதுவே முதல் முறையாகும்.
- சீனாவின் லாசா மற்றும் நேபாளத்தின் காத்மாண்டு ஆகிய நகரங்களுக்கு இடையே ரயில் இணைப்பு ஒன்று முன்மொழியப் பட்டுள்ளது.
- டிரான்ஸ்-இமயமலை இணைப்பானது புத்தரின் பிறப்பிடமான லும்பினியுடனும் இணைக்கப்பட இருக்கின்றது.
- எவரெஸ்ட் சிகரத்தின் மீண்டும் அளவிடப்பட்ட உயரத்தை அறிவிக்க நேபாளமும் சீனாவும் கூட்டாக ஒப்புக் கொண்டுள்ளன.

# தேசியச் செய்திகள்

## கண் பார்வையற்ற முதலாவது பெண் இந்திய ஆட்சிப் பணி அதிகாரி

- இந்தியாவின் முதலாவது கண் பார்வையற்ற பெண் இந்திய ஆட்சிப் பணி அதிகாரியான பிரஞ்சல் பாட்டீல் என்பவர் திருவனந்தபுரத்தின் துணை ஆட்சியாளராகப் பொறுப்பேற்றுள்ளார்.
- 2018 ஆம் ஆண்டில் அவர் இந்திய ஆட்சிப் பணியில் நியமிக்கப்பட்ட பின்னர் இது அவருக்குக் கிடைத்த இரண்டாவது பணியாகும்.
- 2008 ஆம் ஆண்டில் மத்தியப் பிரதேச மாநிலத்தில் இந்திய ஆட்சிப் பணி அதிகாரியாக பணியில் சேர்ந்த கிருஷ்ண கோபால் திவாரி என்பவர் கண் பார்வையற்ற முதலாவது இந்திய ஆட்சிப் பணி அதிகாரி ஆவார்.


## சட்டத் துறை செயலாளர் - ஏ.கே.மெண்டிராட்டா

- முதன்முறையாக, பணியாற்றிக் கொண்டிருக்கும் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி மத்திய சட்டத் துறை செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.
- அனூப் குமார் மெண்டிராட்டா என்பவர் புது தில்லியில் உள்ள கர்கார்டூமா நீதிமன்றங்களில் வடகிழக்கு மாவட்டத்தின் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதியாகத் தற்பொழுது பணியாற்றுக் கொண்டிருக்கின்றார்.
- 2023 ஆம் ஆண்டு மார்ச் 23 வரை ஒப்பந்த அடிப்படையில் இப்பதவிக்கு மெண்டிரட்டா நியமிக்கப் பட்டுள்ளார்.
- பொதுவாக, செயலாளர் (சட்ட விவகாரங்கள் மற்றும் சட்டமன்றத் துறை) பதவிகள் இந்தியச் சட்டச் சேவைப் பணி அதிகாரிகளால் நிரப்பப் படுகின்றன.

## பொருளாதாரத்திற்கான நோபல் பரிசு

- ஆல்பிரட் நோபலின் நினைவாக 2019 ஆம் ஆண்டின் பொருளாதார அறிவியலுக்கான ஸ்வெரிஜஸ் ரிக்ஸ்பேங்க் பரிசானது அபிஜித் பானர்ஜி, எஸ்தர் டப்லோ மற்றும் மைக்கேல் கிரெமர் ஆகியோருக்கு கூட்டாக வழங்கப்பட்டுள்ளது.

- ❖ பொருளாதார அறிவியலில் நோபல் நினைவு பரிசானது அலுவல்பூர்வமாக ஸ்வெரிஜஸ் ரிக்ஸ்பேங்க் பரிசு என்று அறியப் படுகின்றது.
- ❖ "உலகளவில் வறுமையை ஒழிப்பதற்காக அவர்கள் மேற்கொண்ட சோதனை அணுகுமுறைக்காக" அவர்களுக்கு இந்த விருது வழங்கப்பட்டது.
- ❖ டப்லோ என்பவர் பானர்ஜியைத் திருமணம் செய்து கொண்டார். மேலும் 2011 ஆம் ஆண்டில் "மிக மோசமான பொருளாதாரம்: வறுமை குறித்து மீண்டும் சிந்தித்தல் மற்றும் அதை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான வழிகள்" என்ற மிகப் புகழ்பெற்ற புத்தகம் ஒன்றையும் டப்லோ எழுதியுள்ளார்.
- ❖ இத்தம்பதியினர் மாசசூசெட்ஸ் தொழில்நுட்ப நிறுவனத்தில் பணியாற்றுகின்றனர். மைக்கேல் கிரெமர் ஹார்வர்ட் பல்கலைக்கழகத்தில் பணியாற்றுகின்றார்.
- ❖ 2009 ஆம் ஆண்டில் எலினோர் ஆஸ்ட்ரோமிற்குப் பிறகு, பொருளாதாரத்தில் நோபல் பரிசை வென்ற இரண்டாவது பெண் டப்லோ ஆவார்.
- ❖ இந்தப் பரிசு பெற்றவர்களால் பயன்படுத்தப்பட்ட "புதிய, சக்திவாய்ந்த கருவி" என்பது சீரற்ற கட்டுப்பாட்டுச் சோதனைகளின் பயன்பாடு (Randomised Control Trials - RCTs) ஆகும்.
- ❖ மருந்துகளின் விளைவுகளைச் சோதிப்பதற்காக RCTகள் பெரும்பாலும் மருத்துவத்தில் பயன்படுத்தப் பட்டன.




***தமிழ்நாட்டுடன் தொடர்பு - அப்துல் லத்தீப் ஜமீல் வறுமை ஒழிப்பு ஆய்வகம் (Abdul Latif Jameel Poverty Action Lab - J-Pal)***

- ❖ அபிஜித் பானர்ஜி மற்றும் அவரது மனைவி எஸ்தர் டப்லோ ஆகியோர் நல்லாட்சியை மேம்படுத்துவதற்காக தமிழக அரசுடன் இணைந்து கடந்த ஐந்து ஆண்டுகளாகப்

பணியாற்றி வருகின்றனர்.

- அப்துல் லத்தீப் ஜமீல் வறுமை ஒழிப்பு ஆய்வகமானது இந்தத் தம்பதியினரால் தமிழ்நாட்டில் நிறுவப்பட்டது.
- தற்போதைய அல்லது புதிய திட்டங்களை மதிப்பீடு செய்வதற்கும் அவற்றைக் கண்காணிப்பதற்கும் ஒரு முடிவு/விளைவு அடிப்படையிலான அணுகுமுறையை பின்பற்றுவதற்கும் உள்திறனை வளர்ப்பதில் J-Pal அமைப்பானது அரசாங்கத்திற்கு உதவுகின்றது.

*அபிஜித் பானர்ஜி பற்றி*

- அபிஜித் விநாயக் பானர்ஜி (பிறப்பு 1961) என்பவர் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த அமெரிக்க பொருளாதார நிபுணர் ஆவார்.
- 1981 ஆம் ஆண்டில் கொல்கத்தா பல்கலைக்கழகத்தின் பிரசிடென்சி கல்லூரியில் பொருளாதாரத் துறையில் அவர் பிஎஸ்சி பட்டப் படிப்பை முடித்தார். பின்னர் 1983 ஆம் ஆண்டில் தில்லியின் ஜவஹர்லால் நேரு பல்கலைக் கழகத்தில் பொருளாதாரத் துறையில் அவர் எம்.ஏ. பட்டம் பெற்றார்.
- "தகவல் பொருளாதாரத்தில் கட்டுரைகள்" என்பது குறித்து முனைவர் ஆராய்ச்சி ஒன்றை மேற்கொண்டதன் மூலம் ஹார்வர்டில் பொருளாதாரத் துறையில் அவர் முனைவர் பட்டம் பெற்றார்.
- எஸ்தர் டப்லோ மற்றும் தமிழ்நாட்டில் பிறந்த அமெரிக்கப் பொருளாதார நிபுணரான செந்தில் முல்லைநாதனுடன் இணைந்து இவர் 2003 ஆம் ஆண்டில் J-Pal நிறுவனத்தை நிறுவினார்.

# சர்வதேசச் செய்திகள்

## குழந்தைகளின் ஊட்டச்சத்து குறித்த யுனிசெஃப் அறிக்கை

- மோசமான உணவுப் பழக்க வழக்கங்கள் மற்றும் உணவு முறை ஆகியவற்றின் விளைவுகளை ஆபத்தான வகையில் அதிக எண்ணிக்கையிலான குழந்தைகள் அவதிப்படுகின்றார்கள் என்று யுனிசெப் எச்சரித்துள்ளது.
- இது “2019 ஆம் ஆண்டில் உலகில் உள்ள குழந்தைகளின் நிலை: குழந்தைகள், உணவு மற்றும் ஊட்டச்சத்து” என்ற தலைப்பைக் கொண்ட ஒரு அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- ஐந்து வயதிற்குட்பட்ட 3 குழந்தைகளில் 1 குழந்தையானது (அல்லது 200 மில்லியனுக்கும் அதிகமானவர்கள்) ஊட்டச்சத்து குறைபாடு அல்லது அதிக எடை கொண்டவர்களாக உள்ளனர் என்று அந்த அறிக்கை கண்டறிந்துள்ளது.
- ஆறு மாதங்களுக்கும் இரண்டு வயதுக்கும் இடைப்பட்ட 3 குழந்தைகளில் கிட்டத்தட்ட 2 குழந்தைகளுக்கு அவர்களின் வேகமாக வளர்ந்து வரும் உடல்கள் மற்றும் மூளைகளின் வளர்ச்சிக்கு உதவும் உணவு அளிக்கப் படுவதில்லை.
- இது மோசமான மூளை வளர்ச்சி, மோசமான கற்றல், குறைந்த நோய் எதிர்ப்புச் சக்தி, நோய்த் தொற்றுகள் அதிகரிப்பு மற்றும் சில சூழ்நிலைகளில் இறப்பு ஆகியவற்றை ஏற்படுத்துகின்றது.
- இந்த அறிக்கையானது 21 ஆம் நூற்றாண்டின் குழந்தை ஊட்டச்சத்துக் குறைபாட்டின் அனைத்து வடிவங்களிலும் ஒரு மிக விரிவான மதிப்பீட்டை வழங்குகின்றது.

# விளையாட்டுச் செய்திகள்

## ஆர் பிரக்ஞானந்தா – சதுரங்கம்

- சமீபத்தில் மும்பையில் நடத்தப்பட்ட உலக இளையோர் சதுரங்க சாம்பியன்ஷிப்பில் இந்தியாவின் ஒரே தங்கப் பதக்கத்தை (18 வயதுக்குட்பட்டோர் பிரிவில்) சென்னையைச் சேர்ந்த ஆர் பிரக்ஞானந்தா வென்றுள்ளார்.
- 2013 ஆம் ஆண்டில் 8 வயதுக்குட்பட்டோருக்கான சாம்பியனாகவும் 2015 ஆம் ஆண்டில் 10 வயதுக்குட்பட்டோருக்கான சாம்பியனாகவும் இருந்த பிரக்ஞானந்தாவுக்கு இது மூன்றாவது உலகப் பட்டமாகும்.
- இவர் 2016 ஆம் ஆண்டில் உலகின் முதலாவது இளைய சர்வதேச செஸ் மாஸ்டர் ஆனார்.
- செர்ஜி கார்ஜகின், D குகேஷ் மற்றும் ஜவோகிர் சிந்தாரோவ் ஆகியோருக்குப் பிறகு கிராண்ட் மாஸ்டர் பட்டத்தைப் பெற்ற நான்காவது இளம் நபர் இவராவார்.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★